# திருக்குறள் தொடர்பான செய்திகள்

1) திருவள்ளுவர் ஆண்டின் தொடக்கம் **தை முதல் நாள்**.
2) திருவள்ளுவர் ஆண்டை அறிவித்தவர் **மறைமலை அடிகள்**.
3) திருவள்ளுவர் ஆண்டுக்கு அரசக்கட்டளை வழங்கியவர் தமிழக முன்னாள் முதல்வர் **கலைஞர்**.
4) திருக்குறளுக்கு முதலில் உரை வரைந்தவர் **மணக்குடவர்**.
5) திருக்குறளுக்குப் பத்தாவதாக உரை எழுதியவர் **பரிமேலழகர்**.
6) திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்கள் **நாற்பத்து நான்கு**.
7) திருக்குறளுக்கு உரை எழுதிய பெருமக்கள் **இருநூற்று ஆறு**.
8) திருக்குறளுக்கு வந்துள்ள மொழிபெயர்ப்புகள் **நூற்று ஆறு**.
9) திருக்குறளை இலத்தீனில் வழங்கியவர் **வீரமாமுனிவர்**.

10) திருக்குறளை ஆங்கிலத்தில் அருளியவர் **போப்பையர்**.

11) திருக்குறளுக்காக முதலில் மாநாடு நடத்தியவர் **தந்தை பெரியார்**.

12) குமரியிலிருந்து தில்லி வரை செல்லும் தொடர்வண்டியின் பெயர் **திருக்குறள் விரைவான்**.

13) குமரிக்கடலில் நிற்கும் திருவள்ளுவர் சிலையின் உயரம் **133 அடி**.

14) நெல்லையில் அமைந்துள்ளது **திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலம்**.

15) சென்னை நுங்கம்பாக்கத்தில் நிறுவப்பட்டது **வள்ளுவர் கோட்டம்**.

16) திருக்குறள் சோவியத்து நாட்டில் **கிரெம்ளின் மாளிகையின் நிலவறையில்** உள்ளது.

17) திருக்குறள் இலண்டனில் **விவிலியத் திருநூலுக்கு** இணையாக வைக்கப்பட்டுள்ளது.

18) திருக்குறளை அண்ணல் காந்திக்கு அறிமுகம் செய்தவர் சோவியத்து எழுத்தாளர் **தால் சுதாய்**.

19) திருக்குறளுக்குத் தங்கக்காசு வெளியிட்டவர் **எல்லீசர்**.

20) திருக்குறள் உரை வேற்றுமை வழங்கியவர் பேராசிரியர் இரா. **சாரங்கபாணி**.

21) நரிக்குறவர் பேசும் வக்கிரபோலி மொழியில் திருக்குறளைத் தந்தவர் **கிட்டு சிரோன்மணி**.

22) திருக்குறளின் பெருமையினை உலக அறிஞர் **ஆல்பர்ட்டு சுவைட்சர்** போற்றிப் புகழ்ந்துள்ளார்.

23) வெண்பா யாப்பில் என்றும் பயன் தரும் செய்தியை வழங்குவதால், திருக்குறள் வெள்ளிப்பையில் இட்ட தங்கக்கனி என்பர்.

24) திருக்குறளை **1812** ஆம் ஆண்டு முதலில் அச்சிட்டு வழங்கியவர் **ஞானப்பிரகாசன்**.

25) வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாராட்டியவர் **பாரதியார்**.

26) வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என்று பாராட்டியவர் **பாரதிதாசன்**.

27) திருக்குறளின் முதற்பெயர் **முப்பால்**.

28) திருக்குறளில் நூற்று **முப்பத்து மூன்று** அதிகாரங்கள் உள்ளன.

29) திருவள்ளுவர் நட்பு பற்றி **171 பாக்கள்** உள்ளன.

30) திருக்குறளில் கல்வி பற்றி **51 பாடல்கள்** உள்ளன.

31) திருக்குறளில் இடம் பெறாத உயிரெழுது **ஔ**

32) திருக்குறளில் இல்லாத எண் **ஒன்பது**.

33) திருவள்ளுவர் கடவுளை இறைவன் என்கிறார்.

34) திருக்குறளுக்கு உரிய சிறப்புப் பெயர் **உலகப் பொதுமறை**.

35) திருக்குறளில் உயிரினும் மேலானதாகப் போற்றப்படுவது **ஒழுக்கம்**.

36) காலமும் இடமும் கருதிச் செயலாற்றினால் உலகை வெல்லலாம்.

37) திருக்குறளை அனைத்துச் சமயங்களும் ஏற்றுப் போற்றுகின்றன.

38) திருக்குறள் **தமிழ்த்தாயின் உயிர்நிலை** என்பார் கவிமணி.

39) திருவள்ளுவமாலை திருக்குறளுக்கு எழுந்த **புகழ்மாலை**.

40) திருக்குறள் பொய்யில் புலவன் பொருளுரை எனப் போற்றப்படுகிறது.

41) திருக்குறளை முதலில் பயிற்றுவித்தவர் **வள்ளலார் இராமலிங்கம்**.

42) அரபி மொழியில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் **ஜாகிர் உசேன்**.